முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் – 25/2017

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 இளையராணி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சங்கதிகளை நான் சொல்லித்தான் வழக்கறிஞர் தயார் செய்தாரா என்றால் ஆமாம். இவ்வழக்கின் வாதிகள் பெயர் தெரியுமா என்றால், தனலெட்சுமி, சுப்பிரமணியம். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், சர்வே எண்கள் 710/4 மற்றும் 710/5 ஆகும். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால், எனது தகப்பனார் எனக்கு 17.02.2016 ல் எனக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்தார். மேற்படி தான செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில்தான் தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்று எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு எவ்வாறு மேற்படி சொத்து பாத்தியம் என்றால், அவர் 1958 ல் கிரையமாக வாங்கினார். மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில்தான் எனக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம்.

2) எனது தகப்பனால் 1958 ல் கிரையம் வாங்கிய ஆவணத்தில் உள்ள சொத்து விபரத்தைத்தான் எனது தான செட்டில்மென்ட் ஆவணத்திலும் எழுதி கொடுத்தாரா என்றால் ஆமாம். எனது தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது தகப்பனாரின் கிரைய ஆவணம் மற்றும் எனது தான செட்டில்மென்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், எனது தான செட்டில்மென்ட் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 710/3 ற்கு மேற்கு, சர்வே எண் 710/11 க்கு வடக்கு, சர்வே எண் 710/2 க்கு தெற்கு, இருதய சாமி வீட்டிற்கு கிழக்கு ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள

நான்கெல்லை விபரம் என்னவென்றால் மாரியம்மன் கோயிலுக்கு கீழத்தெரு வீதிக்கு தெற்கு, சேர்ப்பட்டி முத்தப்ப உடையாரின் வீட்டிற்கு மேற்கு, ஆரோக்கியம் உடையார் வீட்டிற்கு வடக்கு, தெய்வசகாய உடையார் வீட்டிற்கு கிழக்கு என கண்டுள்ளது.

3) பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து விபரத்தில் உள்ளவாறுதான் எனக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்தாரா என்றால், அவர் கிரையம் வாங்கிய சொத்துக்கள், அவர் அனுபவம் செய்து வந்த சொத்தையும் சேர்த்து எனக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார். எவ்வளவு நாட்களாக அவர் சொத்துக்களை அனுபவம் செய்தார் என்றால், அவர் கிரையம் செய்த நாள் முதலே அருகில் இருந்த சொத்தையும் சேர்த்து அனுபவம் செய்து வந்தார். எனது தகப்பனார் அனுபவம் செய்து வந்த நிலத்திற்கான வருவாய்துறை ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தான செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள நான்கெல்லைகள் தெரியுமா என்றால், தெரியும். சர்வே எண் 710/3 ற்கு மேற்கு, சர்வே எண் 710/11 க்கு வடக்கு, சர்வே எண் 710/2 க்கு தெற்கு, இருதய சாமி வீட்டிற்கு கிழக்கு ஆகும்.

4) என்னிடம் காட்டப்படும் தான செட்டில்மென்ட் ஆவணம்தான் எனக்கு என் தகப்பனார் எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்து விபரத்தில் பி.உடையாப்பட்டி ஊர் பழைய நத்தம் சர்வே எண் 710/ப, புதிய நத்தம் சர்வே எண் 710/4 ல் ஹெக்டேர் 0.02.31 க்கு 2438 சதுர அடிக்கு 231.14 சதுர மீட்டர் அளவுள்ள காலி நிலமும், சொத்தின் சந்தை மதிப்பு ரூ.1,37,528.30/- என கண்டுள்ளது என்றால் சரிதான். பி.உடையாப்பட்டி ஊர் பழைய நத்தம் சர்வே எண் 710/ப, புதிய நத்தம் சர்வே எண் 710/5 ல் ஹெக்டேர் 0.02.07 க்கு 2230 சதுர அடிக்கு 207.17 சதுர மீட்டர் அளவுள்ள காலி நிலமும், சொத்தின் சந்தை மதிப்பு ரூ.1,23,266.15/- என கண்டுள்ளது என்றால் சரிதான்.

5) மேலும் அதே ஆவணத்தில் இரு மனைகளின் மொத்த அளவு 4718 சதுர அடி 438.31 சதுர மீட்டர் என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

ஆவணத்தில் நான்கெல்லையாக கிழமேல் தார் ரோட்டிற்கு தெற்கு, தெய்வசகாயம் வீட்டு அத்திற்கும், பாலசுப்பிரமணியம் வீட்டு அத்திற்கும் கிழக்கு, ஐயாக்கண்ணு காலிமனை நிலத்திற்கு மேற்கு, ஆரோக்கியம் உடையார் வீட்டு அத்திற்கும் வடக்கு, இதற்குள் 4718 சதுர அடிக்கு 438.31 சதுர மீட்டர் என கண்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்திற்கும், எனக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்த சொத்திற்கும் நான்கெல்லை விபரங்கள் வெவ்வேறானவை என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் இருந்த பட்டா எண் தெரியுமா என்றால் 1041 ஆகும். அவ்வாறு போட்டுதான் எனக்கு தான செட்டில்மென்ட் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தான செட்டில்மென்ட் ஆவணத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டேன். அவர் தாக்கல் செய்யவில்லை.

6) சர்வே எண் 710/4 ற்கு தனலெட்சமி பெயரில் பட்டா இருந்த விபரம் எனக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்த போதே தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 710/5 ற்கு ராமசாமி பெயரில் பட்டா இருந்த விபரம் எனக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்த போதே தெரியுமா என்றால் தெரியும். இருவரும் தவறுதலாக பட்டா பெற்றுள்ளனர். மேற்படி இருவர் பெயரிலும் பட்டா இருப்பதை ரத்து செய்யக்கோரி வருவாய்துறையில் ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால், மனு கொடுத்துள்ளேன். மேற்படி மனுவின் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தனரா என்றால் தற்போதுவரை எதுவும் எடுக்கவில்லை. மேற்படி மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரைத்தான் கேட்க வேண்டும். நான் சொல்வது போல எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்திருந்தால் அந்த மனுவை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

7) எனது பெயரில் உள்ள தான செட்டில்மென்ட் ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மைத்தன்மை தெரிந்துவிடும் என்தால்தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போதுவரை சர்வே எண் 710/4 க்கு

தனலெட்சுமி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். தனலெட்சுமி என்பவர் சர்வே எண் 710/4 மற்றும் சர்வே எண் 710/5 க்கு போலியான ஆவணங்கள் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்ததை ரத்து செய்ய வேண்டும் என குளித்தலை வருவாய் கோட்டாட்சியருக்கு மனு கொடுத்து எங்களை விசாரணை செய்தனரா என்றால் இல்லை. 21.07.2022 ல் வருவாய் கோட்டாட்சியரின் அலுவலகத்தில் இருந்து விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. விசாரணைக்கு சென்றேனா என்றால் எனது கணவர் சென்றார்.

8) விசாரணை பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றும், என் சார்பாக என் கணவர் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. கடவூர் கோட்டாட்சியர் 01.12.2016 ல் புல எண் 710/4 மற்றும் 710/5 ல் போலியாக ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே அதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்றும், தனலெட்சுமிக்கு சார்பதிவாளர், தரகம்பட்டி அவர்களுக்கு அனுப்பிய கடிதம் பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 710/4 தனலெட்சுமி பெயரிலும், சர்வே எண் 710/5 ராமசாமி பெயரிலும்தான் தற்போதுவரை பட்டா உள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 1041 என்பது இல்லாத ஒன்று என்றும், அதன் அடிப்படையில் எழுதிக் கொடுக்கப்பட்ட எனது தான செட்டில்மென்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**